# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 30 செவ்வாய்க்கிழமை 13.06.2023 கதிர் 02



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# முதலில் ஜனாதிபதித் தேர்தல் அதுவும் முன்கூட்டி நடக்காது!

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எந்தவொரு தேர்தலும் இடம்பெறாது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த தினத்துக்கு முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என அறியமுடிகின்றது. அடுத்த வருடம் ஒகஸ்ட் மாதத்தின் பின்பே ஜனாதிபதித் தேர்தல். ஆனால், அந்தத் தேர்தலை இலக்கு வைத்து இப்போதே அடிப்படை வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அரச தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

அதற்கு முன்னதாக உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் அரசு நடத்த வேண்டும். ஆனால், அரசு தேர்தலை நடத்துவதற்குப் பணமில்லை என்று கூறி உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் காலவரையறையின்றி ஒத்திப்போட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. எப்படியும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எந்தவொரு தேர்தலும் இடம்பெறாது என்பது தெளிவாகின்றது, என்று அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பேச்சுவார்த்தைகளைக் குழப்பாதீர்கள் தமிழ்க்கட்சிகளுக்கு மஹிந்த அறிவுரை



ஜனாதிபதியுடனான பேச்சுக்களில் ஆரம்பத்திலேயே நிபந்தனைகளை முன்வைத்து எச்சரிக்கைகளை விடுத்து குழப்பியடிக்க வேண்டாம் என்று தமிழ்க் கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன், என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வைக் காணும் செயல்பாட்டில் இறங்கியுள்ளார். இதற்கு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான பெரமுன முழு ஆதரவை வழங்குகின்றது. ஏனைய கட்சிகளும் ஆதரவு வழங்கும் நிலையில் உள்ளன.

இந்த நல்லதொரு சந்தர்ப்பத்தைக் குழப் பியடிக்க வேண்டாம் என்று தமிழ்க் கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன். சர்வதேச சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் செயல்பட்டால் இங்கு எல்லாம் குழப்பத்தில்தான் முடியும். - என அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ் பௌத்தத்தை ஏற்ற ரணிலுக்கு மனோ கணேசன் எம்.பி. பாராட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பாராட்டுவதாகவும், முதன்முறையாக நாட்டின் தலைவர் இலங்கைத் தீவின் தமிழ் பௌத்த வரலாற்றை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியினருடனான கலந்துரையாடலின் போது, தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சில பணிப்புரைகளை விடுத்துள்ளமையையும் அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அதன்போது இலங்கைத் தீவின் தமிழ் பௌத்த வரலாற்றை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்க கருத்துக் கூறியுள்ளார். இப்படி ஒரு தமிழ் பௌத்த வரலாறு இருப்பதை சிங்களத் தேசியவாதிகள் மறைக்க விரும்புகிறார்கள்.

விஜயன் வந்து இறங்கிய கதை பொய்யென்று என்னை தேடி வந்து ஞானசாரர் சொன்னது போன்றும், இளவரசன் விஜயன் வரவை நினைவுகூர்ந்து இலங்கை அஞ்சல் திணைக்களம் முத்திரை வெளியிட்டு, பின்னர் அதை இரண்டு வருடங்களில் மீளப் பெற்றதைப் போன்றும், வெறும் கைகளால் சூரியனை மறைப்பதைப் போன்றும், வரலாற்றில் தமிழர்களுக்கு உரிய இடத்தை இவர்கள் எப்போதும் மறைக்க முயன்று வருகிறார்கள், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பௌத்த வரலாறு அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டால், இன்று நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் என்ற பூட்டுக்கு அது சாவியாக அமையும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நோக்கில், 2018 ஆம் ஆண்டு அவர் அமைச்சராக இருந்தபோது, பிரபல சிங்கள வரலாற்றாசிரியர், சினிமா எழுத்தாளர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, இலங்கையின் தமிழ் பௌத்த வரலாற்றைப் பற்றி சான்றுகளுடன் எழுதிய, தமிழ் பௌத்தன் (தமிழ பௌத் தயா) சிங்கள நூல் நாட்டில் பாவனையில் இல்லாமல் இருந்தது.

அந்த நூலைத் தேடிப் பிடித்து, பேராசிரியரின் அனு-மதியைப் பெற்று அதை எனது அமைச்சின் செலவில் மறுபிரசுரம் செய்து, நாட்டின் சிங்கள பாடசாலைகளுக்கும், விகாரைகளுக்கும் இலவசமாக அனுப்பி வைத்ததாகவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அதன்பின் பேராசிரியர் ஆரியரத்னவை அழைத்து சில பிக்குகள் கண்டித்துள்ளார்கள், எனத் தான் அறிந்தாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் பௌத்தம் இருந்தமையை ஏற்றுக்கொண்டதையடுத்து அவரையும் திட்டித்தீர்ப்பார்களோ தெரியவில்லை, எனவும் அவரை அந்த கௌதம புத்தனும், கதிர்காமக் கந்தனும் காப்பாற்றட்டும், எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டிருக்கிறார்.



## நல்லூரில் விசேட அபிஷேகம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக தினம் இன்றாகும். இதையொட்டி, இன்று செவ்வாய்க்கிழமை காலை சகஸ்ரசங்காபிஷேகமானது நடைபெற்றுள்ளது.

ஆலயத்தில் விசேட அபிஷேக பூசைகள் இடம்பெற்று மூலஸ்தானத்திலே வீற்றுள்ள வேல் பெருமானுக்கு அந்தண சிவாச்சாரியார்கள் 1008 சங்குகளால் ஆனந்த அபிஷேகம் செய்துள்ளனர்.

## கடந்த பதின்மூன்று ஆண்டுகளில் இரண்டாயிரத்து 793 பேர் கைது! பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு தெரிவிப்பு

கடந்த 13 ஆண்டுகளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இரண்டாயிரத்து 793 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 184 பேர் சந்தேகநபர்களாக அடையாளப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவல்களிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் இரண்டாயிரத்து 793 பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இரண்டாயிரத்து 474 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 184 பேர் சந்தேகநபர்களாக அடையாளப்படுத்தப்பட்டு, நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 44 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். 31 பேர் குற்றமற்றவர்கள் என்று தெரிவித்து விடுவிக்கப்பட்டுள்ளனர். 10 வழக்குகள் மீளப் பெறப்பட்டுள்ளன, என்று அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்றும், அதனை நீக்க வேண்டும் எனவும் கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அரசின் நிலைப்பாடு வெளியானது!

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான திட்டம் அரசிடம் இல்லை, என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்திருக்கிறார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகச் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

நாடாளுமன்ற தேர்தல் சட்டம், உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டளைச் சட்டம், ஜனாதிபதித் தேர்தலுக்கான விசேட ஏற்பா-டுகள் சட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றில் திருத்தம் செய்வதற்கு கடந்த வருடம் டிசம்பர் 12ஆம் திகதி

4 ➤

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## 300 போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் ஒருவர் கைது!

வவுனியா, கோவில் குளம் சந்தியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது கட்டுப்படுத்தப்பட்ட போதைப்பொருளான பிரீகபலின் என்ற மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

300 போதை மாத்திரைகளை விற்பனைக்காக எடுத்துச் சென்றபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் வவுனியாவைச் சேர்ந்த 41 வயதுடையவர் என்றும், மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## பளையில் கனரக வாகனம் விபத்து



பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முல்லையடிப் பகுதியில் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த கனரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த கனரக வாகனம் ஏ9 வீதியின் அருகே முல்லையடிப் பகுதியில் மின் கம்பத்துடன் மோதி வீட்டின் மதில் மேல் விழுந்து விபத்துகுள்ளானது.

இச்சம்பவமானது இன்று காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளை பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.




## எல்.பி.எல் ஏலம் நாளை 358 வீரர்கள் பங்கேற்பு

2023 ஆம் ஆண்டின் லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடருக்கான வீரர்கள் ஏலம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள நிலையில் குறித்த ஏலத்தில் 358 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 20 ஆம் திகதி வரை நடைபெறுவுள்ள லங்கா பிரீமியர் லீக் போட்டித் தொடரில், ஐந்து அணிகளின் உரிமையாளர்கள் தங்கள் உரிமைகளை பிரதிநிதித்துவப்படுத்த வீரர்களைத் தேர்வு செய்யவுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான ஏலத்தில் இந்தியாவின் சுரேஷ் ரெய்னா, அவுஸ்திரேலியாவின் க்றிஸ் லீன் மற்றும் பென் கட்டின், தென்னாபிரிக்காவின் ரசி வண் டெர் டுசன், நியூசிலாந்தின் கொலின் டி கிரண்ட்ஹோம், மேற்கிந்திய வீரர்களான எவின் லூவிஸ் மற்றும் கார்லோஸ் பிரத்வைட் போன்ற உலகின் பிரபல வீரர்களும் பங்கேற்கின்றனர்.

## மீண்டும் முதலிடத்தில் ஜோகோவிச்!

உலக டென்னிஸ் வீர வீராங்கனைகளின் புதிய தரவரிசைப் பட்டியலைச் சர்வதேச டென்னிஸ் சங்கம் நேற்றுத் திங்கட்கிழமை வெளியிட்டிருந்தது.

இதன்படி, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் 7,595 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் இருந்து முன்னேறி மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

பிரான்ஸ் ஓபன் போட்டியின் அரையிறுதியில் கார்லஸ் அல்காரசையும், இறுதியில் கஸ்பர் ரூட்டையும் வீழ்த்தி 23 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றியமையே ஜோகோவிச்சின் புள்ளிப் பட்டியல் முன்னேற்றத்திற்கு காரணமாக அமைந்துள்ளது.



36 வயதான ஜோகோவிச் இந்த ஆண்டில் மூன்றாவது முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

## ஆசியாவின் சிறந்த விஞ்ஞானிகளின் பட்டியல் வெளியீடு

ஆசிய விஞ்ஞானி இதழ், கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஆசியாவின் மிகச்சிறந்த விஞ்ஞானிகளின் பட்டியலைத் தொகுத்து வெளியிட்டு வருகின்றது.

அதில் ஆசியாவில் இருக்கும் மிகச் சிறந்த விஞ்ஞானிகளின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஆசியாவின் சிறந்த 100 விஞ்ஞானிகளின் பட்டியலில் இலங்கையைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் இடம்பெற்றுள்ளனர்.

குறித்த இதழில், கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சதுரங்க ரணசிங்க, மொரட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அஷானி சவிந்த ரணதுங்க, கலாநிதி ஆஷா டிவோஸ், கலாநிதி ரொஹான் பெத்தியகொட மற்றும் பேராசிரியர் சந்தன ஜயரத்ன ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த மூன்று மாதங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படும் அமைச்சர் நம்பிக்கை

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை அடுத்த மூன்று மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட 62 ஒப்பந்தங்களில் 25 ஒப்பந்தங் கள் மட்டுமே தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். அதன் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்காக, இலங்கை மத்திய வங்கியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் வரையறுக்கப்பட்ட காலக் கெடுவுடன் செயல்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தற்போது அது முன்னேற்றம் அடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குள் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்துடன் தொடர்புடைய இலக்குகளை அடைவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



## கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் இந்திய துணைத் தூதுவரைச் சந்தித்தனர்

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளதாக கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதி அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல், இலங்கைக் கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோதத் தொழில் நடவடிக்கைகள், சீன கடலட்டைப் பண்ணை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரும் 15 ஆம் திகதியுடன் இந்திய மீனவர்களின் மீன்பிடித் தடைக்காலம் நிறைவுபெறவுள்ள நிலையில், இந்திய இழுவைப் படகுகள் இலங்கை எல்லைக்குள் வராது இந்திய எல்லைக்குள்ளேயே தங்கள் தொழிலைச் செய்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்று தாம் கோரியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## டிஜிட்டல் மயப்படுத்திய வெளிநோயாளர் பிரிவு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை திறப்பு

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் டிஜிட்டல் மயப்படுத்திய வெளிநோயாளர் பிரிவு நேற்று திறந்து வைக்கப்பட்டது. சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

உங்களுடைய பாடசாலைகளைப் பெற்றோர்களின் பங்களிப்புடன் அதிபர் சகிதம் சுத்தம் செய்ய வேண்டும். உங்களுக்கு ஏதாவது உதவிகளோ ஆலோசனைகளோ தேவைப்பட்டால் சுகாதார அமைச்சின் விதிகளுக்கமைய எங்களால் அவற்றை வழங்க முடியும். உதவிகள் தேவையான பாடசாலைகள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஊடாகவும் மாவட்ட டெங்கு ஒழிப்புப் பிரிவினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

டெங்கு பெருகும் இடங்கள், விசேடமாக நீர் தேங்கி நிற்கும் இடங்களை சுத்தம் செய்ய வேண்டும். நாளை மட்டுமல்ல டெங்கு நுளம்புகளின் தாக்கம் குறையும் வரையும் குறைந்த பின்னரும் தினமும் டெங்கு நுளம்புகளை அழிக்கும் வேலைத்திட்டங்களை செய்ய வேண்டும். - என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன் சிகிச்சை பெறவருவோரில் புற்றுநோய் அறிகுறிகள் உள்ளவர்களுக்குத் தனியாக சோதனைகளை முன்னெடுக்கும் வகையில் பிரிவொன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மருத்துவ விடுதியில் ஏனைய நோயாளர்களுடன் சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முதல் தனியாக நோயாளர் விடுதியானது சிறுநீரக நோயாளர்களுக்காக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் ஊடாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையினை அபிவிருத்தி செய்யும் விசேட திட்டத்தின் கீழ் இந்த பிரிவுகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் பல்வேறு பிரிவுகளின் பணிப்பாளர்கள் மற்றும் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், நிர்வாகப் பிரிவினர் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
- maalaikkathir@gmail.com

# இந்தியாவின் இலட்சியத் திட்டமான சந்திரயான் 3 அடுத்த மாத மத்தியில் விண்ணில் ஏவப்படும்

சந்திரயான் 3 விண்கலம் அடுத்த மாத மத்தியில் விண்ணில் ஏவப்படும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

கேரளாவில் கல்லூரியின் கண்காட்சி ஒன்றில் பங்கேற்ற இஸ்ரோ தலைவர் சோம்நாத், இஸ்ரோவின் இலட்சிய நிலவுத் திட்டமான சந்திரயான் 3 ஐ விண்ணில் செலுத்துவதற்கான இறுதிக்கட்டப் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியிருப்பதாகக் கூறினார்.

சந்திரயான் திட்டத்தின் ஒரு பகுதியான மூன்றாவது விண்கலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து ஜி.எஸ்.எல்.வி. எம்.கே.3 என அழைக்கப்படும் இந்தியாவின் கனமான ஏவுவாகனமான மார்க் 3 இல் இருந்து விண்ணில் ஏவத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த சோம்நாத், இந்த விண்கலம் உந்துவிசை, லாண்டர், ரோவர் ஆகிய 3 அமைப்புகளின் கலவையில் இயக்கப்படும், எனவும் கூறினார்.



சந்திரயான் 3 என்பது சந்திரயான் 2 பயணத்தின் தொடர்ச்சியாகும். இது சந்திர மேற்பரப்பில் பாதுகாப்பாக தரை இறங்குதல் மற்றும் உலாவுதலோடு லேடர், ரோவர் கட்டமைப்புகளைக் கொண்டுள்ளது என்ற அவர், இந்த ஆண்டு மார்ச் மாதம் சந்திரயான் 3 விண்கலம் அதன் சோதனைப் பயணத்தை வெற்றிகரமாக முடித்ததாகவும் கூறியுள்ளார்.

அனைத்துச் சோதனைகளும் சுமூகமாக நடைபெற்றுள்ளதால் நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கும் இந்தியாவின் லட்சியத் திட்டமான சந்திரயான் 3 அடுத்த மாதம் 12 முதல் 19 ஆம் திகதிக்கு இடையில் விண்ணில் ஏவப்படும், என்றும் சோம்நாத் தெரிவித்துள்ளார்.

## கடைசி இந்தியப் பத்திரிகையாளரும் சீனாவில் இருந்து வெளியேற உத்தரவு



இந்த ஆண்டின் தொடக்கத்தில் நான்கு இந்தியப் பத்திரிகையாளர்கள் தங்களது நிறுவனங்கள் சார்பில் சீனாவில் செய்தி சேகரிக்கச் சென்றிருந்தனர். இதில் மூவரின் விசா காலாவதியானதை அடுத்து, அவர்களது விசாவை புதுப்பிக்க சீன அரசு மறுத்துவிட்டது. அதனால், கடந்த மாத இறுதியில் அவர்கள் சீனாவை விட்டு வெளியேறினர். பி.டி.ஐ. செய்தியாளர் மட்டும் சீனாவில் தங்கியிருந்த நிலையில், தற்போது அவரையும் இம்மாத இறுதிக்குள் வெளியேற உத்தரவு பிறப்பித்துள்ளது சீன அரசு.

முன்னதாக, இந்தியாவில் பணியாற்றும் சீனப் பத்திரிகையாளர்களை இந்திய அரசு பாகுபாட்டுடனும் நியாயமற்ற முறையிலும் நடத்துகிறது, என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் குற்றம் சுமத்தியிருந்தார்.

மேலும், தற்போது, இந்தியாவில் ஒரேயொரு சீனப் பத்திரிகையாளர் மட்டுமே எஞ்சியிருக்கிறார். அவரும் விசா நீடிப்புக்காகக் காத்திருக்கிறார். இதற்கு முன்னதாக, இந்த ஆண்டின் தொடக்கத்தில் சின்/ஹவா நியூஸ் ஏஜென்சி, சைனா சென்ட்ரல் டெலிவிசன் ஆகிய நிறுவனத்தின் பத்திரிகையாளர்கள் விசா கோரி விண்ணப்பித்திருந்த நிலையில், அதனை இந்திய அரசு அனுமதிக்கவில்லை. 2020 முதல் சீனப் பத்திரிகையாளர்களின் விசாக்கள் இந்தியாவால் அங்கீகரிக்கப்படவில்லை. இதன் விளைவாக 14 ஆக இருந்த சீன நிருபர்கள் எண்ணிக்கை, தற்போது ஒரேயொரு நபராகக் குறைந்துள்ளது, என்றும் வாங் வென்பின் குற்றம் சாட்டினார்.

சீனாவின் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இந்தியா, சீன நிருபர்கள் எந்தச் சிரமமும் இல்லாமல் இந்தியாவில் செயல்பட்டு வருகின்றனர். ஆனால், சீனாவில் உள்ள இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு அந்தச் சுதந்திரம் இல்லை. கடந்த மாதம், ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்திற்கு வருகை தந்த சீன நிருபர்களுக்கு இந்தியா தற்காலிக விசா அனுமதி அளித்தது.


அனைத்து வெளிநாட்டு ஊடகவியலாளர்களையும் நாட்டிற்குள் செயல்பட இந்தியா அனுமதித்தது. இதேபோல், சீனாவும் இந்தியப் பத்திரிகையாளர்களையும் அங்கு அனுமதிக்கும் என்று எதிர்ப்பார்க்கிறோம, என்று இந்திய வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

## சென்னை விமான நிலையத்தில் புதிய முனையம் ஜூலை மாதம் முதல் முழுமையாக இயங்கும்

சென்னை விமான நிலையத்தில் புதிய முனையம் ஜூலை மாதம் முதல் முழுமையாக இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய முனையம் சோதனை முறையில் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கியது. அன்றைய தினம் சோதனை நடவடிக்கையாக பங்களாதேஸ் தலைநகர் டாக்காவில் இருந்து சென்னை - டாக்காவுக்கு இடையே 'யு.எஸ். பங்ளா' என்ற பயணிகள் விமானம் தனது சேவையை ஆரம்பித்திருந்தது.

சென்னை விமான நிலையத்தில் 1,260 கோடி ரூபாவில், 1.36 லட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பில் புதிய ஒருங்கிணைந்த முனைய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. குறித்த முனையக் கட்டடத்தைத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி திறந்து வைத்திருந்தார்.



தற்போது தொடர்ந்தும் சிறிய வகை விமானங்கள் இங்கு சோதனை முறையில் இயக்கப்பட்டு வருகின்றன. அடுத்த வாரத்தில் இருந்து நடுத்தர விமானங்கள் சோதனை முறையில் இயக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் இருந்து ஆண்டுக்கு 2.3 கோடி பயணிகள் தங்களது பயணங்களை மேற்கொள்கின்றனர். ஆகவே, புதிய முனையம் சீராக இயங்க ஆரம்பிக்கும்போது பயணிகள் எண்ணிக்கை 3 கோடியாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என சென்னை விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விலங்குகளின் உரிமைகளைப் பறிக்க முடியாது மும்பை உயர் நீதிமன்றத் தீர்ப்பில் தெரிவிப்பு



மகாராஷ்டிர மாநிலம் நாக்பூர் பொலிஸ் சரகத்துக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 2022 ஓகஸ்ட் மாதம் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அளவுக்கு அதிகமாக எருமை மாடுகளை ஏற்றி வந்த லொறியை சோதனையிட்டிருந்தனர். அப்போது, மாடுகளை கொடுமைப்படுத்தும் வகையில் வாகனத்தில் அடைத்து ஏற்றி வந்ததையடுத்து அந்த மாடுகள் இறக்கப்பட்டு கோசாலையில் விடப்பட்டன.

இதையடுத்து, எருமை மாடுகளின் உரிமையாளர்கள் பம்பாய் உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் கிளையில் வழக்குத் தொடுத்தனர். அதில் அந்த மாடுகளை உரிமையாளர்களான தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரியிருந்தனர்.

இந்த வழக்கு தனி நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு வந்துள்ளது. வழக்கை விசாரித்த நீதிபதி தனது தீர்ப்பில், மனிதர்களைப் போலவே மிருகங்களுக்கும் உணர்வுகள், உணர்ச்சிகள் உள்ளன. மிருகங்களால் பேச முடியாது என்பதால் அவற்றின் உரிமைகளை நாம் பறிக்க முடியாது. மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள ஒரே வித்தியாசம் பேசும் தன்மைதான். அந்த எருமை மாடுகளைக் கொடுமைப்படுத்திய அவற்றின் உரிமையாளர்களிடம் அவற்றை ஒப்படைக்க முடியாது. உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற ஒரு வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் இதைக் கூறுகிறேன், என்று தெரிவித்திருக்கிறார்.

பறிமுதல் செய்யப்பட்ட 68 எருமை மாடுகளையும், விலங்குகள் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. விலங்குகள், கால்நடைகளைப் பாதுகாக்கும் பொறுப்பைச் சட்டம் வழங்கியுள்ளது. கொடுமைகளை விளைவித்த ஒருவரிடம் அவற்றை ஒப்படைக்க முடியாது.

இந்த கால்நடைகளை எம்.ஏ.ஏ. பவுண்டேஷன் என்று அழைக்கப்படும் கோசாலையில் ஒப்படைக்க வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட பிரிவுப் பொலிஸ் அதிகாரிகள், கால்நடை மருத்துவருடன் மாதத்துக்கு 2 முறை கோசாலைக்குச் சென்று ஆய்வு செய்யவேண்டும். பின்னர் அது தொடர்பான அறிக்கையை அங்குள்ள பிரதேச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும், என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

## டெல்லியில் பைக் டக்ஸிகளுக்கு தடை உச்ச நீதிமன்றம் ஆதரவாகத் தீர்ப்பு

தலைநகர் டெல்லியில் பைக் டக்ஸிகளுக்கு மாநில அரசால் விதிக்கப்பட்ட தடை செல்லும், என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது தொடர்பான டெல்லி உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடையை அது விதித்துள்ளது.

டெல்லி அரசு கடந்த பெப்ரவரி மாதம் ரபிடோ, ஊபர் உள்ளிட்ட பைக் டக்ஸி சேவைகளைத் தடை செய்வதாக அறிவித்தது. தடையை மீறினால் 10,000 ரூபா அபராதமும், ஓராண்டுச் சிறையும் விதிக்கப்படும் என்று அறிவித்தது. பைக் டக்ஸிகளால் வேலைவாய்ப்புகள் உருவானாலும், பயணிகளின் பாதுகாப்பில் எந்தவித சமரசமும் செய்ய முடியாது என்று தடைக்கான விளக்கத்தையும் டெல்லி அரசு கொடுத்திருந்தது.

ஆனால், பைக் டக்ஸிக்கான தடையை எதிர்த்து டெல்லி உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அப்போது, பைக் டக்ஸி இயக்குவது தொடர்பாக அரசாங்கம் இறுதிக் கொள்



கையை வெளியிடும் வரை ரபிடோ, ஊபர் போன்ற பைக் டக்ஸி சேவை வழங்குநர்கள் இயங்கலாம், என்று உயர் நீதிமன்றம் அறிவித்தது. இதனை ஏற்றுக்கொள்ளாத மாநில அரசு, அந்தத் தடையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் இரண்டு மனுக்களைத் தாக்கல் செய்தது.

அந்த மனுக்கள் நேற்று உச்ச நீதிமன்ற விடுமுறைக் கால அமர்வில் விசாரணைக்கு வந்திருந்தன. அப்போது, பைக் டக்ஸி தொடர்பாக அரசாங்கம் இறுதிக் கொள்கையை வகுக்கும் வரையில் பைக் டக்ஸிகளை இயக்க இயலாது என்றும், இந்த வழக்கினை டெல்லி உயர் நீதிமன்றம் மேற்கொண்டு விசாரிக்கலாம் என்றும் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

# கனடாவில் ஏற்பட்ட காட்டுத் தீ கட்டுப்பாட்டுக்குள்



கனடாவின் கியூபெக் மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத்தீ, ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 72 ஆக இருந்த தீப்பரவல் சம்பவங்கள் தற்போது 44 ஆகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் ஏற்பட்ட காட்டுத் தீயானது அண்டை நாடுகளான அமெரிக்கா, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளையும் பாதித்திருந்தது.

குறித்த நாடுகளைச் சேர்ந்த தீயணைப்பு வீரர்களின் கூட்டு முயற்சியானது தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர உதவும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

வெப்பமான காலநிலை காணப்படுவதால் காட்டுத் தீப் பரவல் அதிகரிக்கலாம் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# தொழில் நுட்ப வளர்ச்சியில் உலகில் மூன்றாவது இடத்தில் பிரித்தானியா




செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பமானது, உலகையே மாற்ற வல்லது என்று பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

லண்டனில்நடைபெற்ற தொழில் நுட்ப வாரக் கருத்தரங்கில் உரையாற்றிய ரிஷி சுனக், சுகாதாரம், உணவு போன்ற பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவானது உலகில் பல மாற்றங்களைக் கொண்டுவரும் எனத் தெரிவித்தார்.

தொழில் நுட்பத் துறையின் வளர்ச்சி தொடர்பில் ஆச்சரியங்கள் அதிகரிப்பதாகத் தெரிவித்த ரிஷி சுனக், அமெரிக்கா, சீனாவை அடுத்துப் பிரித்தானியா தொழில் நுட்ப வளர்ச்சியில் மூன்றாவது இடத்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இருப்பினும், செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தால் பலருக்கு வேலை பறிபோகும் அபாயம் இருப்பதாகவும், அது தொடர்பில் தாம் கவனத்தில் எடுத்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

# யுனெஸ்கோவில் மீண்டும் இணையும் அமெரிக்கா




ஐக்கிய நாடுகள் சபையின், கலாசார மற்றும் அறிவியல் நிறுவனமான யுனெஸ் கோில் மீண்டும் இணைவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. குறித்த தீர்மானம் கடந்த திங்களன்று மேற்கொள்ளப்பட்டது.

யுனெஸ்கோ கொள்கை வகுப்பில், குறிப்பாக உலகெங்கிலும் உள்ள செயற்கைநுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கான தரநிலை களை அமைப்பதில் அமெரிக்கா விட்டுச் சென்ற இடைவெளியைச் சீனாவே நிரப்புகி றது என்ற கவலையை அடுத்து, யுனெஸ்கோ வில் மீண்டும் இணை வதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலாண்மை மற்றும் வளங்களுக் கான அமெரிக்க துணைச் செயலாளர் ரிச்சர்ட் வர்மா, மீண்டும் இணைவதற்கான திட்டத்தை முறைப் படுத்தும் கடிதத்தை யுனெஸ்கோ இயக்குநர் ஜெனரல் அட்ரி அசோலேயிடம் கடந்த வாரம் சமர்ப்பித்தார். இந்த முடிவு ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்புக்கு ஒரு பெரிய நிதிப் பங்களிப்பை வழங்குவதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

யுனெஸ்கோவி ற்கான சீனாவின் தூதர் ஜின் யாங், அமெரிக்காவை மீண்டும்கொண்டு வர யுனெஸ்கோ மேற்கொண்ட முயற்சிகளுக்கு தனது நாட்டின் சார்பாக பாராட்டுக்களைத் தெரிவித் துள்ளார்.

அமெரிக்க அரசாங் கம் தனது 2023 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகையான 600 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஹோலோகாஸ்ட் கல்வி, உக்ரைனில் கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், பத்திரிகையாளர் பாது காப்பு மற்றும் ஆபிரிக்காவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றிற்காக 10 மில்லியன் டொலர்கள் நன்கொடையையும் வழங்கும் எனவும் அமெரிக்க துணைச் செயலா ளர் ரிச்சர்ட் வர்மா வழங்கிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2011 இல் பாலஸ்தீனத்தை ஓர் உறுப்பு நாடாகச் சேர்க்க வாக்களித்த பின்னர், அமெரிக்காவும் இஸ்ரேலும் யுனெஸ்கோவிற்கு நிதியுதவி செய்வதை நிறுத்தியிருந்தன. இஸ்ரேலுக்கு எதிரான நிலை மற்றும் நிர்வாகச் சிக்கல்களை மேற்கோள் காட்டி அடுத்த ஆண்டு முழுவதுமாக யுனெஸ்கோவிலிருந்து விலக ட்ரம்ப் நிர்வாகம் 2017 இல் முடிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## வலுவிழந்தது பிபர்ஜாய் புயல் உஷார் நிலையில் குஜராத்

அரபிக் கடலில் மையம் கொண்டிருந்த பிபர்ஜாய் புயல் சற்று வலுவிழந்துள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் உருவான காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி பிபர்ஜாய் புயலாக உருவெடுத்துள்ளது. தற்போது இந்தப் புயலானது வடகிழக்கை ஒட்டிய மத்திய வடக்கு அரபிக்கடலில் ஜக்காவு துறைமுகத்திற்கு 360 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளது. கடந்த 6 மணி நேரத்தில் மணித்தியாலத்துக்கு 5 கிலோமீற்றர் வேகத்தில் நகர்ந்து செல்லும் இந்தப் புயல், நாளை காலை வரை வடக்குப்பகுதியை நோக்கி நகர்ந்து, அதன்பிறகு வடக்கு - வடகிழக்குப் பகுதியை நோக்கி நகரும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஜூன் 15 ஆம் திகதி பிற்பகலில் குஜராத்தின் மாண்ட்வி - பாகிஸ்தானின் கராச்சி பிரதேசங்களுக்கு இடையே ஜக்காவ் துறைமுகத்துக்கு அருகே பாகிஸ்தான் கடலோரப் பகுதியையொட்டி சௌராஷ்டிரா, கட்ச் பகுதியில் கரையைக் கடக்கும் என்று எதிர்வு கூரப்பட்டுள்ளது.

புயல் எச்சரிக்கை காரணமாக 67 ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## சவப்பெட்டியில் இருந்து உயிருடன் எழுந்த மூதாட்டி


ஈக்வடோர் நாட்டில், இறந்ததாக அறிவிக்கப்பட்ட 76 வயது மூதாட்டியை, சவப் பெட்டியிலிருந்து நான்கு மணிநேரத்தின் பின்னர் உயிருடன் மீட்டுள்ளனர்.

ஈக்வடோர் நாட்டின் லாஸ் ரியோஸ் மாகாணத்தில் உள்ள மருத்துவமனையில் இதயம் தொடர்பான பிரச்சினைகள் இருந்த பெல்லா மொண்டோயா எனும் 76 வயது மூதாட்டி, உடல் நலக் கோளாறு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சிகிச்சையளிக்கப்பட்ட மூதாட்டிக்கு பக்கவாதம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக மருத்துவமனையால் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவரது உடல் சவப்பெட்டியில் வைக்கப்பட்டு, பின்னர் ஈமக்கிரியைகள் செய்வதற்காக சவப்பெட்டி திறக்கப்பட்டபோது, அவர் உயிருடன்இருப்பது தெரிய வந்துள்ளது.

அதன் பின்னர், மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த மூதாட்டிக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. அலட்சியத்துடன் செயற்பட்டமைக்காக வைத்தியசாலை நிர்வாகத்தின் மீது மூதாட்டியின் மகன் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

## இலங்கையின் முதல் ஏ330-200 விமானம் மீண்டும் பிரான்ஸிடம் ஒப்படைக்கப்படவுள்ளது



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்த முதல் A330-200 ரக விமானம், 23 வருட சேவையின் பின்னர் பிரான்ஸிடம் மீள ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விமானங்களை உற்பத்தி செய்யும் பிரான்ஸின் எயார்பஸ் நிறுவனத்திடமிருந்து குத்தகை அடிப்படையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இந்த விமானத்தைப் பெற்றிருந்தது. இதில் 18 வணிக வகுப்பு இருக்கைகள் மற்றும் 251 பொருளாதார வகுப்பு இருக்கைகள் உள்ளன.

லண்டன் ஹீத்ரோ, ஜேர்மனியின் பிராங்பேர்ட், அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன், ரஷ்யாவின் மொஸ்கோ போன்ற நீண்ட தூரப் பயணங்களுக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இந்த விமானத்தைப் பயன்படுத்தியுள்ளது. இதுவரை இந்த விமானம்100,000 விமான மணி நேரத்தை நிறைவு செய்துள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## 123 மாடிக் கட்டிடத்தில் ஏற முயன்ற பிரித்தானிய இளைஞர் கைது



உலகின் ஆறாவது மிகப்பெரிய கட்டிடமான, தென்கொரிய தலைநகர் சியோலில் உள்ள 123 மாடிக் கட்டிடத்தில் கயிறு இல்லாமல் ஏற முயன்ற பிரித்தானிய இளைஞரைத் தீயணைப்புப் படையினர் தடுத்து நிறுத்தி இறக்கியுள்ளனர்.

பிரித்தானியாவின் லொற்றி வேர்ல்ட் டவர் கட்டிடத்தின் மீது ஜோர்ஜ் கிங் தொம்ப்சன் என்னும் 24 வயது இளைஞர், கயிற்றின் உதவி இல்லாமல் வெறும் கைகளால் ஏற ஆரம்பித்திருந்தார். அவர் 73 ஆவது தளத்தில் தடுத்து நிறுத்தப்பட்டு, பராமரிப்புப் பாதை வழியாக வெளியே அழைத்து வரப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதற்கு முன்னர், அவர் 2019 ஆம் ஆண்டில் லண்டனில் உள்ள 72 மாடிகளைக் கொண்ட ஸார்ட் கட்டிடத்தில் ஏறிய வேளையிலும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித் தேர்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரஷவை தீர்மானித்திருந்தது.

அதற்கான சட்டமூல வரைவொன்றை தயாரிப்பதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும், எவ்வாறாயினும் சட்டங்களைத் தனித்தனியாகத் திருத்துவதற்கு பதிலாக, புதிய தேர்தல் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்புத் தொடர்பிலேயே தற்போது கவனம் செலுத்தப்படுகின்றது. நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிய பின்னர் உரிய நேரத்தில், உரிய வகையில் தேர்தல்கள் நடத்தப்படும், என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.06.2023இல் வெளியிடப்பெற்றது.